DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 23.07.2026

| | |
|---|---|
| Case No. | : CC. No.22/2025 |
| Deposition of Witness for Prosecution | : PW.5 |
| Name | : **பிரத்திக்சா** |
| Father Name | : **அசோக்** |
| Village | : |
| Taluk | : |
| Caste | : xxxx |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E.Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 23.07.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்)**
**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்(11.49.A.M.):–**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது விநாயக மிஷன் மருத்துவ கல்லூரியில் மயக்கவியல் துறையில் மேல் படிப்பு படித்து வருகின்றேன். கடந்த 19.08.2024–ம் தேதியன்று கரியராமன் என்பவரை அவருடைய மருமகள் சிகிச்சைக்காக என்னிடம் அழைத்து வந்தார். வழக்கில் சாட்சி கரியராமன் முதலில் குப்பனூர் சரவணா மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தபோது அங்கிருந்து பொன்னாம்மாபேட்டையிலுள்ள சரவணா மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு பரிந்துரை செய்ததன் பேரில் அவர் சிகிச்சை பெற்றார். 19.08.2024–ம் தேதி

மதியம் 12.00 – 12.30 மணியளவில் தனக்கு தெரிந்த ஒரு நபர் கத்தியை கொண்டு கேழையூர் என்ற இடத்தில் தாக்கியதாக கூறினார்.

காயமடைந்த நபர் மதுபோதையில் இருந்துள்ளார். அவரை பரிசோதனை செய்ததில் 1. அவர் 03.00 – 03.30 மணி நேரத்திற்கு சுயநினைவு இல்லாமல் இருந்ததாக கூறப்பட்டது, 2. இடது புற நெற்றியில் தையல் போடப்பட்ட காயம் 5x1 CM அளவில் இருந்தது, 3. தையல் போடப்பட்ட காயம் இடது parietal பகுதியில் 5x1 CM அளவில் இருந்தது, 4. இடது காது பகுதியில் 1x0.5 CM சிராய்ப்பு காயம் அளவில் இருந்தது, 5. வலது மற்றும் இடதுபுற நெஞ்சு பகுதியில் இரத்த கசிவுடன் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. பின்னர் காயமடைந்த நபரை மருத்தவமனையில் அனுமதித்து அவரை மருத்துவர் முத்துகுமரன் மூளை நரம்பியல் மருத்துவர், பாலசுப்பிரமணியம் மூளை நரம்பியல் அறுவை சிகிச்சை மருத்துவர், மருத்துவர் சரவணபாபு இதய மருத்துவர், மருத்துவர் கௌதமன் சிறுநீரகவியல் நிபுணர், மருத்துவர் நரேந்திரன் எலும்பு முறிவு நிபுணர், மருத்துவர் வினோத்குமார் பொது மருத்துவர் ஆகியோர் காயம்பட்ட நபரை பரிசோதனை செய்தார்கள்.

பின்னர் முறையான நுண்கதிர் படங்கள் எடுக்கப்பட்டு அதனை ஆய்வு செய்ததில் காயம்பட்ட நபருக்கு இரண்டு பக்க நெஞ்சு எலும்பில் உள் நுரையிரல் அடிப்பகுதியில் கன்றிய காயம் இருந்தது. இரத்தகசிவு இரண்டு பக்கமும் நெஞ்சு எலும்பின் உள் பகுதியில் இருந்தது. அவருக்கு 7 லிருந்து 10–வது எண்ணிக்கையில் உள்ள வலது புறம் நெஞ்சு எலும்பு முறிவு

ஏற்பட்டிருந்தது. அவருக்கு 8 லிருந்து 10–வது எண்ணிக்கையில் உள்ள இடது புறம் நெஞ்சு எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. இடது புற தோள்பட்டைக்கு கீழ் பகுதியில் உள்ள எலும்பு முறிவு ஏற்பட்டு, நகர்ந்து இருந்தது.

காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட எலும்பு முறிவு பரிசோதனையினை அடிப்படையாக கொண்டு அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். **நான் கொடுத்த காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. அ.சா.1 மதுபோதையில் இருந்ததால் கூட சுயநினைவு இல்லாமல் இருந்திருக்கலாம் என்றால் இருக்கலாம். மேற்குறிப்பிட்ட காயங்கள் கூர்மையான கத்தியால் கூட ஏற்படலாம் என்றால் வெட்டுக்காயம் கத்தியால் ஏற்படலாம் மற்றப்படி எலும்பு முறிவு கத்தியால் ஏற்பட வாய்ப்பில்லை. மதுபோதையால் மேற்குறிப்பிட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல, அவ்வாறு வாய்ப்பில்லை. உயரமான இடத்திலிருந்து கீழே விழுந்தால் கூட மேற்குறிப்பிட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.34.P.M)**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-.R.Elanchezhian,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.